# கல்வி அமைச்சு

## நாட்டில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள தரம் I இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் -2021

இத்துடன் உள்ள உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகுதி பெற்ற அலுவலர்களை தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுவின் கட்டளையின் படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I யில் தகுதி பெற்ற அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. **தகைமைகள்**

i. இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I யின் அலுவலராக இருத்தல்

**குறிப்பு 1** : விண்ணப்பம் கோரும் இறுதி தினத்தின் போது இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1க்கு உயர்த்தப்பட தகுதியான அலுவலர்கள் மாத்திரமே இந்த வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க வேண்டுமே அல்லாமல் பிற அலுவலர்களால் முன்வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (நேர்முக பரீட்சையின் சந்தர்ப்பத்தில் தரம் 1 இற்கு உயர்த்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

ii. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவினால் , தேசிய பாடசாலை அதிபர்களாக நியமிக்கப்பட தகுதியற்றவர்களாக கருதப்படும் அலுவலர்கள் விண்ணப்பிக்கக்கூடாது.

iii. விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தில் வயது 58 வருடங்களுக்கு அதிகமாக இருக்கக்கூடாது.
(தற்போது யாதேனும் பாடசாலையில் அதிபர் தரத்தில் வேலை பாரத்தல்/ கடமை நிறைவேற்றல் /கடமை தழுவுதலுக்கு முறையாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அந்த அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக இந்த வயதெல்லை உரித்தானது அல்ல.)

### 02. **நிபந்தனை**

இம்முறை வெற்றிடம் நிரப்பப்படும் போது உரிய அதிபர் பதவிக்காக நியமனம் பெறும் அலுவலர் அந்த பதவியில் குறைந்த பட்சம் 3 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

### 03. **விண்ணப்பிக்கும் முறை**

i. விண்ணப்பதாரியால் இத்துடன் இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்துக்கு அமைய A4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை சரியாக நிரப்பி பதிவுத் தபாலில் மாத்திரம் கீழ்க்காணும் முகவரிக்கு 2021.10.12 திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைகக் மாறு அனுப்பி வைக்கப்பட வேணடும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது மேல் மூலையில் ''தேசிய பாடசாலைகள் அதிபர் பதவி - இ.க.நி. சே– I '' எனக் குறிப்பிட்டு இருத்தல் வேணடும். தாமதமாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் **"**உதவி செயலாளர், கல்வி சேவைகள் தாபனம் , கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல**"** எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு**

விண்ணப்பத்தை பதிவு தபாலில் அனுப்புவதோடு கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் விண்ணப்பத்துக்காக வலய/மாகாண பரிந்துரை நேர்முக பரீட்சை தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பபடிவம் கோரும் இறுதி தினத்துக்கு முன்னர் (2021-10.12) கிடைக்கும் பதிவுத் தபால;/மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு மாத்திரமே நேர்முக பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும். மின்ன- -ஞ்சல் விண்ணப்பம் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளப்பட்டதை கல்வி சேவைகள் தாபன கிளை மின்னஞ்சல் வழியாக விண்ணப்பதாரியால் உறுதிப்படுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். மின்னஞ்சல் முகவரி –

eseas.moe@gmail.com
sasese.moe@gmail.com

ii. தாங்கள் அண்மையில் எடுத்துகெ காண்ட 2 x 2 ½ அங்குல வர்ண புகைப்படத்தை விண்ணப்பத்தின் வலது மேல் மூலையில் ஒடடி அனுப்ப வேண்டும்.

**04. முறை**

பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு அதிபர்களாக அலுவலர்கள் தெரிவு செய்யப்படுவதோடு , வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகள் எண்ணிக்கைக்கு சமமான தொகையினர் அதிபர்களாக நியமிக்கப்பட தெரிவு செய்யப்படுவார்கள்.

என்றாலும் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும் போது விண்ணப்பதாரிக்கு தமது விருப்பப்படி 3 பாடசாலைகளையும் மேலதிகமாக 2 பாடசாலைகளையும் பெயரிடக்கூடியதாக இருப்பதோடு, அதிபர் பதவிக்கு நியமிக்கப்படும் போது அந்த விருப்பத்தேர்வு கவனத்திற் கொள்ளப்படும்.

அதன் படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட இத்துடன் காட்டப்பட்ட புள்ளித்திட்டத்துக்கு அமைய, அக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முக பரீட்சை சபையினால் வழங்கப்படும் புள்ளி, விண்ணப்பதாரரின் விருப்பின் தேர்வு விண்ணப்பதாரர் தொடர்பில் காணப்பட்ட/ நிலுவையிலுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை , கல்வி செயலாளர் பரிந்துரை அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுவினால் அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

பேராசிரியர் கபில சீ. கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு